15th February 1958] [Sri V. Ramaiah]

The above restrictions were originally applicable to agricultural loads throughout the State *excluding* such loads in Tenkasi Taluk and Western half of Sankarankoil taluk in Tirunelveli district which are supplied with power purchased from the Kerala Government. But as the maximum power off-take from Kerala for these areas had exceeded the 5,000 K.W. limit fixed therefor, and as the line capacity also was much less, resulting in poor voltage conditions when the off-take of power was increased, it has become necessary to impose from the middle of November 1957 the above grouping restrictions on the agricultural loads in Tenkasi and Sankarankoil taluks also.

Careful examination of the restrictions imposed will show that no cut in the supply has been ordered, but only certain restrictions have been imposed on the supply, which are mainly intended to avoid undue strain on the power houses in view of their limited generating capacity and to utilize the power generated as also the power purchased from other States to the maximum extent, all the 24 hours. According to the restrictions imposed, connections that come up on and from the 10th October 1957 will get night supply for 8 to 12 hours whereas connections which had come up before the abovementioned date will get 6 hours day, and 8 hours night supply, that is 14 hours supply in all. The power generating capacity is expected to improve in July 1958 when the new 30 M.W. set is likely to be commissioned at Basin Bridge Power Station, and the Periyar Hydro-Electric Station with an additional 65,000 K.W. of installed generating capacity, will be added to the existing capacity of 256,700 K.W. Till then, we will have to put up with slight inconveniences which will be removed at the earliest possible opportunity and I appeal to the hon. Members of this House to explain the position to all concerned and to help the Electricity Board to tide over the present crisis.

IV.—REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES ("DINA THANTHI" CASE).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg to move—

'That the Report of the Committee of Privileges "Dina Thanthi" Case laid on the table on 13th February 1958 be approved.'

இதன் பேரில் நான் பேச வேண்டியது அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். தற்போது சட்ட மன்றங்களில் நடைபெற்றுவரும் நடவடிக்கைகளையெல்லாம் மக்கள் வெகு ஆவலுடனும், ஆர்வத்துடனும் படிக்க முன் வருகிறார்கள். இச்சமயத்தில் இங்கே நடக்கக்கூடிய விஷயங்களை சரியான படி அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானது. அதற்கு பத்திரிகைகள் நல்ல முறையில் இந்தக் காரியத்தைச் செய்வது மிகவும் முக்கியம். ஆகவே பத்திரிகைகள் இங்கே நடக்கக்கூடிய நடவடிக்கைகளை திருத்தியோ அல்லது வேறு விதமாக மாற்றியோ கூறாமல் இருக்க

[Sri C. Subramaniam] [15th February 1958

வேண்டும். இங்கு நடப்பதை மக்கள் அப்படியே தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. இன்றைக்கு அந்தப் பெரிய பொறுப்பு பத்திரிகைகளுக்கு இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப் பொறுப்புக்கு ஏற்ப நம்முடைய பத்திரிகைகள், அது எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் சரி, இங்கு நடக்கக் கூடிய விஷயங்களை பிரசுரிக்கும்போது ஒரு தப்பு அபிப்பிராயம் வரக்கூடிய முறையில் இல்லாமல் இங்கே நடப்பதை மக்கள் உணருகிற முறையில் அறிவிப்பதற்கு முன்வருவார்கள் என்று நினைக்கிறேன். அதற்காக ஒரு நல்ல முறையில்—மக்களை கவர்ச்சிக்கும் முறையில்—செய்திகளைக் கொடுக்கக் கூடாது என்று சொல்ல நான் முன்வரவில்லை. அதன் மூலமாக இங்கே நடவடிக்கைகளை மக்கள் வேறு விதமாக அர்த்தம் கொள்ளக்கூடிய முறையில் இந்தச் செய்திகள் வெளி வராமல் இருப்பது மிகவும் அவசியம். இது வரையிலும் பத்திரிகைகள் இந்த சட்டசபையில் நடக்கும் நடவடிக்கைகளை மக்கள் அறிந்துகொள்ளக் கூடிய வகையில் பிரசுரித்து நல்ல முறையில் சேவை செய்து வந்திருக்கின்றன. இங்கு வந்து பார்க்கக்கூடிய 100 அல்லது 200 பேர்கள் மட்டும்தான் நம்முடைய சட்டசபையின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ளுகிறார்கள் என்பது அல்ல. பத்திரிகைகள் மூலமாகத்தான் பலர் இந்த சபையின் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். ஆகவே நல்ல முறையில் தொடர்ந்து சேவை செய்வதற்கு, எல்லா பத்திரிகைகளும், ஒருவிதமான விலக்கும் இல்லாமல், இந்தப் பணியை மேற்கொண்டு, இதை ஒரு தேசீய சேவையாக ஏற்றுக்கொண்டு நம்முடைய சட்ட சபையின் நடவடிக்கைகளை மக்கள் நல்ல முறையில் உணர்ந்து கொள்ள சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அறிக்கையை இந்த சபை ஏற்றுக் கொண்டு இதற்குமேல் இந்தக் கேஸ் சம்பந்தமாக எந்த விதமான வேறு நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையைப் பார்த்ததிலிருந்து ஒரு பத்திரிகையில் வந்த செய்தி தவறான அடிப்படையில் வந்தது என்ற அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது என்று உணருகிறேன். ஆனால் பொதுவாகவே பத்திரிகைகளில் சட்ட மன்ற பேச்சுக்களும், கருத்துக்களும் அதனுடைய தரத்திற்கு சிறிதேனும் மாறுபட்ட முறையில் பல நேரங்களில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. அது முழு தவறு என்று சுட்டிக்காட்டுவதற்கு இடம் தருகிறது என்று சொன்னாலும் அதனுடைய தரமும், போக்கும் பல பத்திரிகைகளில் பல நேரங்களில் மாறுபடுகிற காரணத்தால் பத்திரிகைகளில் வரும் செய்திகளைக் கண்காணிக்க அரசாங்கத்தின் சார்பாகவோ அல்லது சட்ட மன்றத்தின் சார்பாகவோ ஒரு அதிகாரியையோ அல்லது அதிகாரத் துறையையோ ஏற்படுத்துவது மிகவும் நல்லது அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி ஏற்படுத்தினால் பத்திரிகைகளில் வருகிற செய்திகளை அவ்வப்போது கவனித்து—அது அமைச்சர் பேசியதாக இருந்தாலும் சட்டசபை உருப்பினர் பேசியதாக இருந்தாலும்—அவ்வகளால் ஏற்படுகிற விளைவுகளையும் மாறுபாடுகளையும் உடனடியாக தவிர்ப்பதற்கு நல்ல முறையில் வழி செய்யும் என்கிற கருத்தை கனம் சபாநாயகர் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : The question is—

'That the Report of the Committee of Privileges "Dina Thanthi" Case laid on the table on 13th February 1958 be approved.'

The motion was put and carried.